[2013 மே 3

383—

சத்துணவுக் கூடம்

***25559—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, அம்மாபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதிய சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, அம்மாபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு, புதிய சத்துணவுக் கூடம் அமைக்க 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொருட்கள் வைப்பறையுடன்கூடிய சமையலறைக்கு மேற்கூறை அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. எஞ்சிய பணிகளை விரைந்து முடித்து புதிய சத்துணவுக் கூடம் திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய சங்ககிரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, அம்மாபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிதாக சத்துணவுக் கூடம் அமைக்க அரசு அனுமதி வழங்கி பணி நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணி முடிந்துவிடும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுபோல்,*

2013 மே 3]

சங்ககிரி ஒன்றியத்தில் எத்தனை சத்துணவுக் கூடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதியில் 162 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் சங்ககிரி வட்டாரத்தில் 90 சத்துணவு மையங்களில் இதுபோன்று பழுதுபார்க்கின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடப்பாண்டில் 42 சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள பெரிய பழுதுகளை சரி செய்வதற்கு ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, சரி செய்யப்பட்டு வருகிறது. மேலும், மிகவும் பழுதடைந்துள்ள மையங்களுக்குப் பதிலாக புதிய மையங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் மொத்தம் 1,785 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் மாநகராட்சிப் பகுதிகளில் 50 மையங்களுக்கும், புறநகர் பகுதிகளில் 110 மையங்களுக்கும் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு மீதமுள்ள 1,625 மையங்களுக்கும் எடுத்துச்சென்று இதனை எரிவாயு இணைப்புகள் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டிற்கு 359 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 14,130 வைப்பறையுடன்கூடிய சமையல் அறை கட்டுவதற்கும், சமையல் அறையை நவீனப்படுத்துவதற்கும், 5,384 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்க வேண்டுமென்றும் உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பள்ளியிலே படிக்கக்கூடிய குழந்தைகளில், அதிகமான குழந்தைகள் சத்துணவு உண்பார்களேயானால் எண்ணிக்கையின் அடிப்படையில் அதற்கு முன்னுரிமை தந்து எரிவாயு இணைப்புகள் உடனடியாக வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பள்ளிகளிலே அதிகமான குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள், அவர்களுடைய சட்டமன்ற தொகுதியிலா அல்லது சேலம் மாநகராட்சிப் பகுதிகளிலா என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் சத்துணவு சாப்பிடுகிற குழந்தைகளின் எண்ணிக்கையை வைத்து, உடனடியாக அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 384, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

384—

வேளாண் ஆராய்ச்சி நிலையம்

15954*—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத்தில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*